மின்னிதழ்

# தேசியம்

THESIYAM දේසියම් www.thesiyamnews.com

குரல் - 36 22.04.2023 (சனிக்கிழமை) சித்திரை மாதம் பக்கங்கள் 6 ஊக்குவிப்பு : ரூ.30.00





## 5 பேர் வெட்டிப் படுகொலை!!

## நெடுந்தீவில் தொடரும் பதற்றம்

### உடனடியாகக் கைது செய்!! வீதியில் இறங்கி ஆர்ப்பரிக்கும் மக்கள்!

தொடர்ச்சி 05



## வடக்கு கிழக்கில் 25ஆம் திகதி ஹர்த்தால் :

### 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு

தொடர்ச்சி 06

தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!

வார இதழ் தேசியம்
THESIYAM தேசியம் www.thesiyamnews.com

## ஆசிரியர் பீடம்

இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

## ”சிலை” சர்ச்சைகளும் தமிழர் முன் உள்ள தெரிவும்

வட மாகாணத்தில் “சிலை“ அரசியலும் சர்ச்சையும் தொடர்கிறது. இந்த சிலை சர்ச்சை பெரியார்களது அல்லது மகான்களின் சிலைகளை வைத்து அல்ல. மாறாக கடவுள் சிலைகளை வைத்து இந்த சர்ச்சைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2009 இல் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 14 வருடமாக தமிழர் தேசத்தில் பல சர்ச்சைகளை உருவாக்குவதும் மக்களை நிம்மதியில்லாத வாழ்க்கைக்குள் தள்ளுவதிலும் சிங்கள அரசுகள் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு வருவது புதிதல்ல. தமிழர்களுக்கு எதிரான கலாச்சார இனப்படுகொலையை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் முன்னரை விடவும் திட்டமிட்டு விரிவுபடுத்தி வருவதுடன்,தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு சாவு மணி அடித்துவருகிறது.

யாழ்ப்பாணம் - பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அண்மையில் வைக்கப்பட்ட அம்மன் சிலை விவகாரம் யாழில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் நோட்டிஸ் ஒன்றை சிலைக்கு அருகில் ஒட்டி, பொலிஸாரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தியிருந்தனர். இந்நிலையில் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு யாழ்.நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இந்து அமைப்புக்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கீடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி சட்டத்தரணிகள் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்ததுடன், எழுத்து மூல சமர்ப்பணங்களுக்காக வழக்கு எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றத்தின் கட்டளையை அரச இயந்திரம் நிச்சயமாக கவனத்தில் எடுக்கப்போவதில்லை. ஏற்கனவே இதேபோல் பல கட்டளைகள்,தீர்ப்புகள் கவனத்தில் எடுக்கப்படாத வரலாறுகள் இருக்கின்றன. இதற்கும் அதே நிலைமை தான். அரசாலும் அரசதரப்பாலும் தொடர்ந்தும் தமிழர் தேசத்தில் முன்னெடுக்கப்படும் கலாசார இனப்படுகொலை, மற்றும் மேற்படி அம்மன் சிலை விவகாரம் போன்றவற்றில் தமிழரின் எதிர்ப்புகள், இவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமாக இருக்கிறதா என்பது தொடர்பில் சிந்திப்பது அவசியமாகும். இவற்றுக்கு எதிராக ஒரு கூட்டு செயற்பாட்டை ஒட்டுமொத்த தேசத்தையும் இணைத்துக்கொண்டு ஒரு தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதையோ அவதானிக்கமுடியவில்லை.

ஆசிரியர் ▪ யாழ்ப்பாணம்

### நாகபூசணி அம்மன் உடன் விளையாடாதீர்கள்

# வேலன் சுவாமிகள் எச்சரிக்கை!



நயினாதீவில் ஆலயத்தினுள் சக்தி வாய்ந்தவளாக அம்மன் இருக்கும் போது, நாகபூசணி அம்மன் சிலையை வெட்ட வெளியிலே கொண்டு வந்து வைத்து அம்மனின் சக்தியை ஏன் குறைக்கிறீர்கள்? நாகபூசணி அம்மன் உடன் விளையாடாதீர்கள். அம்மனுக்கு நிச்சயம் பதில் சொல்ல வேண்டி வரும் என வேலன் சுவாமிகள் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் நாகபூசணி அம்மன் சிலையை வைத்ததன் பின்னணியில், இராணுவ புலனாய்வு பிரிவினர் உள்ளதாகவும் வேலன் சுவாமிகள் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடக நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியத்தை சிதைப்பதற்காக தமிழ் தேசியத்திற்கு அந்நியமான சக்திகளே மத பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றன. தூய சைவ சமயம் என்பது மத சார்பு அல்லாதது.

எங்களுடைய தமிழ் தேசிய பயணம் என்பதும் மத சார்பற்ற பயணமாகும். நாங்கள் சைவ தமிழ் தேசியம் என்றோ, கத்தோலிக்க தமிழ் தேசியம் என்றோ பயணிக்கவில்லை.

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்துக்கள். கத்தோலிக்கர் என வேறுபாடுகள் இன்றி அனைவரும் தமிழர்கள் என ஒற்றுமையாக இருந்தோம். கத்தோலிக்கர்கள் சைவர்களுடன் நல்லுறவை பேணுகின்றார்கள்.

கத்தோலிக்கர்களும் மத மாற்ற சபைகளை எதிர்க்கின்றார்கள். இந்நிலையில் இந்து கடவுள்களின் சிலைகள் அனுமதியின்றி வைக்கப்படுவது தவறான காரியம் அதொரு சட்டவிரோத செயற்பாடாகும்.

இலங்கை, இராணுவ புலனாய்வு பிரிவினரே சிலைகளை அனுமதியின்றி வைக்கின்றார்கள் என தெரிவித்த அவர் , சிலை வைப்புக்களுக்கு பின்னால் இராணுவ புலனாய்வாளர்கள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

புத்தர் சிலை வந்து விடும் என்கின்றார்கள். புத்தர் சிலை வந்தால், அது சட்டவிரோதமானது என அதற்கு எதிராக போராட்டம் நடத்தலாம். புத்தர் சிலை வந்து விடும் என்பதற்காக இந்து கடவுள்களின் புனிதத்தை இல்லாததாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட கூடாது.

அதனால் கண்ட கண்ட இடங்களில் இரவோடு இரவாக இந்து கடவுள்களின் சிலைகளை பிரதிஷ்டை செய்வதனை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

உள்ளூர் செய்திகள் ▪ யாழ்ப்பாணம்

# யாழ் நல்லூர் பகுதியில்

## போதை ஊசியுடன் சிக்கிய நபர்கள்!

யாழ்ப்பாணம், நல்லூர் அரசடி பகுதியில் போதை ஊசிகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து போதை ஊசிகள் மீட்கப்பட்டு உள்ளதாக தெரிவித்த பொலிஸார், கைதான மூவரும் நகர் பகுதியில் பழக்கடைகளில் பழ விற்பனையில் ஈடுபடும் நபர்கள் எனவும் கூறியுள்ளனர். அத்துடன் கைதானவர்கள் 27 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உள்ளூர் செய்திகள் ▪ யாழ்ப்பாணம்



## வடக்கு ஆளுநரின் தவறை சுட்டிக்காட்ட

# விக்னேஸ்வரன் தவறிவிட்டார்!

## சி.வி.கே.சிவஞானம் குற்றச்சாட்டு

நியதி சட்ட உருவாக்கம் தொடர்பில் வட மாகாண ஆளுநரிடம் சுட்டிக்காட்ட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தவறிவிட்டதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று (22.04.2023) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறிப்பிட்ட கலந்துரையாடலின் போது பல் வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் அண்மையில் உருவாக்கப்பட்ட நியதி சட்டம், சட்டத்துக்கு விரோதமானது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நேரடியாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

நீங்கள் பிழையாக செயற்பட்டு விட்டீர்கள், அங்கு அவ்வாறு குறிப்பிடவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழில் இளம்

## அரச உத்தியோகஸ்தருக்கு

# நேர்ந்த சோகம்



யாழ் - கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் தலைமைச் செயலக திறைசேரியில் பணியாற்றிய அரச உத்தியோகஸ்தர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முகாமைத்துவ உத்தியோகத்தராக பணியாற்றிய 36 வயதான ஜெயேந்திரன் நிஜந்தன் என்பவரே திடீரென ஏற்பட்ட காய்ச்சலால் மரணமடைந்துள்ளார்.

குறித்த உத்தியோகஸ்தர் காய்ச்சல் காரணமாக கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்ற போது அங்கு அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்ததாகத் தெரிய வருகின்றது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## யாழ்.வடமராட்சி கிழக்கில் மீண்டும் மணல் அகழ்வுக்கு அனுமதி!!

# கேள்விக்கு ஆடி.. அசைந்துவந்த பதில்...

யாழ்.வடமராட்சி கிழக்கு மருங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 2023ம் ஆண்டு புதிய மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது.

மருதங்கணி பிரதேச செயலகத்தில் கீழ் உள்ள பகுதிகளில் மணல் அகழ்வுகளை நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் பல்வேறு முறைபாடுகளை தெரிவித்துவரும் நிலையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் 08.03.2023 வழங்கப்பட்ட தகவல் அறியும் சட்ட மூலத்திற்கு சுமார் ஒரு மாதங்கள் கடந்த நிலையில் மிருதங்கேணி பிரதேச செயலகத்தால் பதில் வழங்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக தகவல் அறியும் சட்டமூலத்தின் கீழ் தகவல் கோரப்பட்டு 13 அலுவலக நாட்களில் தகவல் கோருபவருக்கான பதிலை வழங்க வேண்டும். மருதங்கேணி பிரதேச இலக்கத்திடம் கோரப்பட்ட தகவலில் குறித்த பகுதியில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவது யார்? யார் ஊடாக மணல் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது? 2023ல் புதிதாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டதா? போன்ற கேள்விகளுக்கு தாம் அனுமதி வழங்குவதில்லை மற்றும் 2023ல் புதிய மணல் அகழ்வு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. என தகவல் வழங்குவதற்கு ஒரு மாதம் கடந்துள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலக தகவல் உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மருதங்கேணி பிரதேச செயலகப் பகுதியில் 2023 தொடக்கத்தில் இருந்து அம்பன் கிழக்கு கிராம அவிருத்தி சங்கத்தின் ஊடாக

யாழ்.மாவட்டத்துக்கான புதிய மணல் விநியோகம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான அனுமதிகளை புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணியகத்தால் வழங்கப்படுவதாகவும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த வேதநாயகன் மற்றும் மகேசன் ஆகியோர் புதிய மணல் அகழ்வு அனுமதிகளை வழங்காது நிறுத்தி இருந்தனர். இவ்வாறான நிலையில் யாழ்.மாவட்ட புதிய அரசாங்க அதிபராக கடமையேற்ற அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பதவியேற்ற ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் புதிய அனுமதிகள் வழங்கப்பட்டமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

வடமராட்சி கிழக்கு மருதங்கணி பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெறுவதால் எதிர்காலத்தில் பல பகுதிகள் நீரில் மூழ்கக் கூடிய அபாயம் இருப்பதாக அப்பகுதி மக்கள் எழுத்து மூலமாக கடிதங்களை வழங்கியும் புதிய அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே யாழ்.மாவட்டத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பெறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டால் சில வருடங்களில் மிருதங்கேணி பிரதேசம் நீரில் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழ் விஜிதா மரணத்தில் எழுந்துள்ள சந்தேகம்

## சமூக பொறுப்புள்ளவர்கள் மௌனம் காப்பது ஏன்?



வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், இலங்கை தமிழ் அரசு கட்சியின் காங்கேசன்துறை தொகுதிக்கிளை தலைவருமான சுகிர்தன் வீட்டிற்குள் தீமூட்டி இளம் குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியை சேர்ந்த 36 வயதான இளம் தாய் விஜிதா உயிரிழந்திருந்தார். இந்த நிலையில், தமது மகளின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக மகளைபறிகொடுத்த பெற்றோர் கண்ணீருடன் கூறியுள்ளனர்.

உயிரிழந்த விஜிதா யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்தில் கடமையாற்றி வந்தவர். அவருக்கு திருமணமாகி 10 வயதான பெண் பிள்ளை ஒன்றும் உள்ள நிலையில் தமது பிள்ளையுடன் அவர் வசித்து வந்ததாக கூறப்படுகின்றது.

அதேவேளை சுகிர்தன் நீண்டகாலத்தின் முன்னரே திருமணமானவர் என்பதுடன் அவரது மனைவி வெளிநாட்டில் இரு பிள்ளைகளுடன் வசித்து வரும் நிலையில், சுகிர்தனின் மற்றுமொரு மகன் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றி வருவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் உயிரிழந்த விஜிதாவின் வீட்டிலேயே தவிசாளர் உணவருந்துவதாகவும் அந்த பெண்ணின் பிள்ளையை வெளியிடங்களிற்கும் கல்வி நடவடிக்கைக்கும் அவர் அழைத்து செல்வதாகவும் உயிரிழந்த விஜிதாவின் பெற்றோர் கூறுகிறார்கள்.

கடந்த 16ஆம் திகதி தனது தோழி ஒருவர் பெட்ரோல் இன்றி வீதியில் இடைநடுவில் நிற்பதாகவும், அவருக்கு பெட்ரோலை வழங்கி விட்டு வருவதாகவும் கூறியே வீட்டை விட்டு விஜிதா வெளியேறியுள்ளார் .

எனினும் இரவு 1 மணிவரை வீடு திரும்பாத விஜித்தாவிற்கு பலமுறை தொலைபேசி அழைப்பை எடுத்தும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. பின்னர் இரவு 1.30 மணியளவில் சுகிர்தனின் மகனும் மற்றுமொரு நபரும் தமது வீட்டிற்கு வந்து இவ்வாறு மகள் தீ மூட்டிகொண்ட நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.



அதனைகேட்டு பதறியடித்த பெற்றோர்கள் அதிகாலை முச்சக்கரவண்டியில் மகளை பார்க்க வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். இந்நிலையில் மகள் 10 மணிக்கு வீட்டில் இருந்து துவிச்சக்கரவண்டியில் சென்றாள். எனவே 3 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து மகள் 10.30க்கு அங்கு சென்றிருப்பாள். அதற்கு பிறகு அவள் தீமூட்டி கொண்டுள்ளாள்.

ஆனால் சுகிர்தன் தங்களுக்கு எதனையும் கூறவில்லை என கண்ணீர்விடும் விஜிதாவின் தாயார், தமது தொலைபேசி இலங்கங்கள் அவரிடம் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் தனது மகளின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும், விஜிதாவின் மரணதொடர்பில் உண்மையான விசாரணை மூலம் நீதி கிடைக்கவேண்டும் எனவும் பெற்றோர் கண்ணீர் விடுகின்றனர்.

அதேவேளை விஜிதா தற்கொலை செய்தாரா அல்லது குற்றச்செயல்கள் நடந்ததா என்பது உறுதியாகாத நிலையில் தவிசாளர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் விஜிதாவின் இறப்பை தற்கொலை எனக் கருதிவிட்டு யாழ்ப்பாணச் சமூகம் கடந்து போகின்றதா? எனும் சந்தேகம் வலுவடைந்துள்ளது.

இந்திய அரசியலை விட கேவலமான அரசியல் எமது தேசத்தில் இப்போது உள்ளது. அரசியல்வாதிகள் எதையும் செய்து விடலாம் யாரும் தம்மை கேள்வி கேட்க முடியாது என்ற நிலையில் எமது தேசம் உள்ளது.

இதுவே சாதாரண நபர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தால் நிச்சயமாக பொது அமைப்புகள் அரசியல்வாதிகள் பாய்ந்துவந்து குரல் கொடுத்திருப்பார்கள்.

வலிகாமம் என்பது யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப் பெரும் மக்கள் தொகை உள்ள ஒரு பகுதி ஆகும். அதில் சமூக பொறுப்போடு சிந்திக்கும் மக்கள் ஏராளமானோர் இருந்தும் விஜிதா மரணத்தில் ஏன் மௌனம் காக்கின்றார்கள் என்பது கேள்விக்குறி.

அன்று வித்தியாவுக்காக குரல் கொடுத்தவர்கள், இன்று விஜிதா தொடர்பில் மௌனின்ற நிலமை வேதனையை ஏற்படுத்துகின்றது.

இதேபோல் நாளை இன்னொரு சம்பவம் நடந்தேறாது என்பது என்ன நிச்சயம்? விஜிதாவின் மரணத்தில் மறைக்கப் பட்ட இரகசியம் என்ன? தாயை இழந்து தவிக்கும் குழந்தைக்கும், கதறி அழும் பெற்றோருக்கும் பதில் கூறாது, எல்லாவற்றுக்கும் காலத்தை காரணம் கூறி சமூக பொறுப்புள்ள எவரும் இதனை கடந்து செல்ல முடியாது,

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# நெடுந்தீவில் தொடரும் பதற்றம்

## உடனடியாகக் கைது செய்!! வீதியில் இறங்கி ஆர்ப்பரிக்கும் மக்கள்!

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வெட்டு காயங்களுடன் 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் என ஐவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளார்.

100 வயதான கனகம் பூரணம் எனும் மூதாட்டி பலத்த வெட்டு காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லண்டன் பிரஜாவுரிமை பெற்ற வேலாயுதம் பிள்ளை நாகேந்திர ரத்தினம் (வயது 78) யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான நாகநதி பாலசிங்கம் (வயது 82), பாலசிங்கம் கண் மணிப்பிள்ளை (வயது 76), கார்த்திகேசு நாகேஸ்வரி (வயது 83), மகாதேவன் (வயது 75) என்பவர்களே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

**சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,**

நெடுந்தீவு மாவளி இறங்கு துறைக்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் மூதாட்டியொருவர் நெடுந்தீவுக்கு செல்வோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல் ,உணவு வழங்குதல் போன்றவற்றை தொழிலாக செய்து வந்துள்ளார்.



இவரது கணவர் 1986ஆம் ஆண்டு குமுதினி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த மூதாட்டி தனது வாழ்வாதாரத்தை தானே கொண்டு நடாத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவில் உள்ள ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்திருந்த ஐவர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நெடுந்தீவு சென்று இறங்குதுறைக்கு அருகில் உள்ள குறித்த மூதாட்டியின் வீட்டில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வீட்டில் இருந்து இன்றைய தினம் சனிக்கிழமை காலை எவரும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அயலவர்கள் வீட்டிற்கு சென்று பார்த்த போது வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் வீட்டின் வெளியேயும் ஏனையவர்கள் வீட்டின் உள்ளே படுக்கை மற்றும் ஏனைய பாகங்களிலும் கொடூரமான வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டனர்.

அதில் ஒருவர் படுகாயங்களுடன் காணப்பட்ட நிலையில் அவரை மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்துறை காவல் நிலையத்தில் இருந்து காவல்துறைக் குழு நெடுந்தீவு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**நால்வர் அடங்கிய கும்பலே படுகொலை செய்தது ?**

நால்வர் கொண்டே கும்பலே படுகொலையை செய்துள்ளதாகவும், வீட்டின் சற்று தூரத்தில் முன் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ளமையால், வீட்டின் பின் பகுதி ஊடாகவே கும்பல் வீட்டினுள் புகுந்து இருக்கலாம் எனவும், வாள்கள் மற்றும் கோடாரி போன்ற பயங்கர ஆயுதங்கள் தாக்கியே படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை வீட்டில் இருந்த ஐவர் படுகொலையாகி உள்ளதாலும், ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாலும், வீட்டில் இருந்த பொருட்கள் எவையேனும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளனவா? என்பதனை அறிய முடியவில்லை எனவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

**படகு சேவைகள் இடைநிறுத்தம்.**

நெடுதீவில் இருந்து குற்றவாளிகள் தப்பி செல்லாதவாறு நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான படகு சேவைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

**நீதவான் சம்பவ இடத்தில் விசாரணை.**



ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் நெடுந்தீவுக்கு நேரில் சென்று சம்பவ இடத்தினை நேரில் பார்த்து விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதேவேளை யாழ்ப்பாண தடயவியல் காவல்துறைக்குழுவும், சட்ட வைத்திய அதிகாரியும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

**நீதிபதியை வழிமறித்து போராட்டம்.**

சம்பவம் இடம்பெற்ற வீட்டில் விசாரணைகளை முடித்துக்கொண்டு நெடுந்தீவு இறங்கு துறைக்கு வந்த நீதவானை வழிமறித்து மக்கள் போராட்டம் நடாத்தினார்கள்.

குற்றவாளிகளை உடனடியாக கண்டறிந்து அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனையை வழங்க வேண்டும் எனவும், நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரி போராட்டம் செய்தனர்.

**சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில்.**

நீதவான், சட்ட வைத்திய அதிகாரி சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

**டக்ளஸ் காவல்துறையினருக்கு பணிப்பு.**



வட மாகாணத்திற்கான பிரதிப் காவல் துறைமா அதிபருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு பகுதியில் சந்தேகத்திற்கு இடமான நடமாட்டங்கள் தொடர்பாகவும், இன்று நெடுந்தீவை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியதுடன், இக்கொலைகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு, மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சத்தினை விரைவில் களைய வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ நெடுந்தீவு

# வடக்கு கிழக்கில் 25ஆம் திகதி ஹர்த்தால் :

## 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு



வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் எதிர் வரும் 25ஆம் திகதி பொது கடையடைப்பு போராட்டத்திற்கு 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

யாழில் உள்ள தனியார் விடுதியில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே இவ் விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவமயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இந்த கதவடைப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் தமிழரசிக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, டெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# குரங்குகளை அன்றி

## ராஜபக்ஷ சகோதரர்களையே சீனாவுக்கு நாடு கடத்த வேண்டும்

- பொ. ஐங்கரநேசன் -



விவசாயத்துறை சார்ந்த போதிய நிபுணத்துவம் இல்லாததாலேயே நாட்டில் விவசாயத்துறை பாதிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அத்துடன் குரங்குகளை ஏற்றுமதி செய்யாமல் ராஜபக்ஷ சகோதரர்களுடன் தற்போதையே ஆட்சியாளர்களையே சீனாவிற்கு நாடு கடத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

குரங்குகளை ஏற்றுமதி செய்வது பொருத்தமில்லாத செயற்பாடு எனவும் அந்த முயற்சிகளை நிறுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# நெடுந்தீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்

## சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் : தமிழ்த் தேசியக் கட்சி வலியுறுத்து!



நெடுந்தீவில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு இந்த படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நெடுந்தீவில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து தமிழ்த் தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நெடுந்தீவு இறங்கு துறைக்கு அண்மித்த வீடொன்றில் தங்கியிருந்த ஐவர் இன்று அதிகாலை படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு 12ஆம் வட்டாரம் தஃ06 கிராம சேவகர் பிரிவில், மாவிலி துறைமுகம் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு, மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சத்தினை விரைவில் களைய வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சி வலியுறுத்துகின்றது.

இந்த படுகொலை குழுவாகவா அல்லது தனிநபரால் மேற்கொள்ளப்பட்டதா என நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் வடமாகாணத்தில் எந்த ஒரு பகுதியிலும் இது போன்ற படுகொலைகள் இடம்பெறுவதை தவிர்க்கும் வகையில் கொலையுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளுக்கு எந்தவொரு பாரபட்சமும் காட்டாமல் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

நூற்றுக்கணக்கான கடற்படையினர் காணப்படும் முகாமின் முன்னால் வீட்டில் உள்ளவர்கள் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்வது என்பது நினைத்து கூட பார்க்க முடியாத ஒரு விடயமாகும். நெடுந்தீவு பகுதிக்குள் நுழையும் போதே ஆள் அடையாள அட்டை பதிவு செய்தல், குறுக்கு விசாரணைகள் மேற்கொள்தல் போன்ற நடவடிக்கைகளை கடற்படையினர் முன்னெடுக்கும் நிலையில் இவ்வாறான ஒரு தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டு தப்பிச்செல்வது என்பது பொது மக்கள் மத்தியில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான கொலையாளிகள் தப்பி செல்வதற்கு முடியும் எனின் மக்களின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த கடற்படை முகாம் என்னத்திற்காக இந்த இடத்தில் இருக்க வேண்டும். மக்களை பாதுகாக்கவே பாதுகாப்பு தரப்பினர் இருக்க வேண்டும் குற்றவாளிகளை காப்பாற்றும் பாதுகாப்பு துறை மக்களுக்கு அவசியம் இல்லை என தமிழ்த் தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் சாடியுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்